★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Entered as a Newspaper at the General Post Office
Sri Lanka Under No QB/8945/78
மலர் 21 ஆடி 17 றம்ழான் 8 இதழ் 171
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 2-8-79

RECEIVED 1979 -8- 2 PERIODICALS DIVISION UNIV. LIBRARY ★ CAMPUS

5-வது தமிழாராய்ச்சி மகாநாட்டை நடத்த

## எம்.ஜி.ஆர். தலைமையில் 40பேர் கொண்ட செயற்குழு

சென்னை, ஆகஸ்ட், 1
ஐந்தாவது தமிழாராய்ச்சி மகாநாட்டை தமிழ் நாடு அரசே மிகப்பெரிய அளவில் சிறப்பாக நடத்தவிருக்கிறது.
இந்த மகாநாட்டை நடத்தி முடிப்பதற்கென தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன் தலைமையில் 40 பேர் கொண்ட செயற்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது
அடுத்த ஆண்டு ஜனவரி 2ம் திகதி தொடக்கம் 8ம் திகதி வரையில் நடைபெறவிருக்கும் மகாநாட்டு ஏற்பாடுகளைக் கவனிக்கவென திருச்சிராப்பள்ளி நகரசபை ஆணையாளர் திரு சிவகுருநாதன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.
1968ம் ஆண்டு நடைபெற்ற 2-வது தமிழாராய்ச்சி மகாநாட்டை அனைத்துலகத் தமி

[6ம் பக்கம் பார்க்க]

காமன்வெல்த் மகாநாட்டில் ரொடீஷியப் பிரச்னை:

# முசரேவா ஆட்சியைக்கவிழ்க்க அதிபர் கவுண்டா உறுதி

## சட்டரீதியான கறுப்பர் ஆட்சிக்கு பிரிட்டன் ஆதரவு

### பிரதமர் பிரேமாவுக்கு மகாராணி விருந்து

லூசாக்கா, ஆக் 2

பொதுநல நாடுகளின் மகாநாட்டை ஆரம்பித்துவைத்த சாம்பியா அதிபர் கென்னத் கவுண்டா நேற்று சிம்பாப்வே ரொடீஷியாவின் பிஷப் முஸரேவா ஆட்சியைக் கடுமையாகத் தாக்கிப் பேசினர்.

கடந்த ஏப்ரல் மாதம் அங்கு நடைபெற்ற தேர்தல் ஒன்றையும் மாற்றிவிடவில்லை. அது இன்னமும் பிரிட்டிஷ் ஆட்சியின் ஒருகாலனியாகவே இருக்கிறது என்று கவுண்டா கண்டித்தார்.

முப்பதுக்கு மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் பொதுநல நாடுகளின் மகாநாட்டில் ஜனதிபதி கவுண்டா ஆரம்ப உரை நிகழ்த்தினர்.

சிம்பாப்வே ரொடீஷியாவில் இன்னமும் வெள்ளையர் ஆட்சிதான் நடைபெறுகிறது. பிஷப் முஸரேவாவின் ஆட்சியைக் கவிழ்க்க தேசபக்த முன்னணி எடுத்துவரும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க ஆபிரிக்க நாடுகள் கடமைப்பட்டுள்ளன என்றும் அதிபர் கவுண்டா கூறினர்.

ஆரம்பக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய பிரிட்டிஷ் பிரதம மந்திரி ரொடீஷியாவில் சட்ட பூர்வமான பெரும்பான்மை ஆட்சியேற்பட வேண்டும் என்பதே பிரிட்டிஷ் அரசின் நோக்கம் என்றார், அரசியல் சட்டத்துக்கு அமையவே அங்கு பெரும்பான்மை அரசொன்று ஏற்படவேண்டும். அது பொதுநலநாடுகளும் சர்வதேச நாடுகளும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும் என்றும் திருமதி தட்சர் கூறினர்.

எதிர்வரும் வெள்ளியன்று சிம்பாப்வே ரொடீஷியப் பிரச்னை விரிவாக ஆராயப்படவிருக்கிறது.

இந்த மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கைப் பிரதமர் திரு ஆர் பிரேமதாசவும் குழுவினரும் நேற்று இங்கு வந்து சேர்ந்த போது சாம்பிய நாட்டு ஜனதிபதியும் பிரமுகர்களும் வரவேற்றனர், நேற்று பிரிட்டிஷ் எலிசபெத் மகாராணி அவருக்கு மதிய போசன விருந்தளித்து கௌரவித்தார்,

இலங்கை மக்களுக்கும் ஜனதிபதிக்கும் தமது வாழ்த்துக்களை தெரிவிக்கும்படி மகாராணி இலங்கைப் பிரதமரிடம் கேட்டுக் கொண்டார், இலங்கையின் பொருளாதார வளர்ச்சி பற்றி தாம் அக்கறையுடன் அறிந்து மகிழ்ச்சியடைவதாகவும், தாம் இலங்கை வந்தபோது திரு. பிரேமதாச கொழும்பு மாநகர சபையில் வரவேற்பளித்ததை நினைவில் வைத்திருப்பதாகவும் மகாராணி தெரிவித்தார்.

ஐயக்கோன் கொலைமுயற்சி:

## மூன்று எதிரிகளும் விடுதலை

(யாழ்ப்பாணம்)

உடுவில் ஐயக்கோன் கொலை முயற்சி வழக்கில், விசாரணை நடுவில் எதிரிகள் மூவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம் ஜமீல் முன்னிலையில் நேற்று மூன்ருவது தினமாக நடைபெற்றது.

இவ்வழக்கில் உடுவிலில் 75-ம் ஆண்டு ஜுலை 11-ம் திகதி சட்டத்தரணி வே செல்லத்துரையை [ஐயக்கோன்] துப்பாக்கியால் சுட்டு கொலை செய்ய முயற்சித்ததாகவும் அதே இடத்தில் அதே நேரத்தில் சு பிரேமகுமாரை சுட்டுக்கொலை செய்ய முயற்சித்ததாகவும் செ மகேந்திரலிங்கம், ச தம்பிராசா, பொ சிவரத்தினம் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1-ம் 2-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி பாலாதலைபு, சட்டத்தரணி எஸ் லோகேஸ்வரன் அனுசரணையுடன் ஆஜரானர், 3-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி சி மோதிலால் நேரு, சட்டத்தரணி எ லோகேஸ்வரன் அனுசரணையுடன் ஆஜரானர், அரசதரப்பில் சட்டத்தரணி ஆர் தவராசா வழக்கை நடத்தினர்.

இன்ஸ்பெக்டர் எஸ் சீவரத்தினம் சாட்சியமளித்தபின்னர் ஜுரிசபையினர் தனிமையில் கூடி ஆலோசனை செய்தனர்.

விசாரணையை தொடரவிரும்பவில்லையென்றும், 3 எதிரிகளும் நிரபராதிகள் என்றும் ஜுரி சபையினர் ஏகமனதாக முடிவு செய்ததை தொடர்ந்து நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார்.

[=]

கூட்டுறவுக் கடைகளில்

## போதிய அளவு அரிசி இருக்கவேண்டும்

[கொழும்பு]

கூட்டுறவுக் கடைகளில் பங்கீட்டுக்குப் புறம்பாக விற்பனை செய்வதற்கு போதிய அளவு அரிசியைக் கையிருப்பில் வைத்திருக்கவேண்டுமென பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்குத் தேவையான அளவு அரிசியைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் இந்த ஏற்பாட்டை செய்யும்படி கேட்கப்பட்டுள்ளது

மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் மக்கள் அரிசியை அதிகமாகக்கொள்முதல் செய்ய விரும்புவார்கள் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## அ. தி. மு. க. அரசில் சேரும்

சென்னை, ஆ 1

அ இ அண்ணு தி மு கழகம் திரு சரண்சிங் தலைமையிலான மத்திய அரசில் சேர்ந்து கொள்வதென முடிவு செய்துள்ளது,

பொது வேலைத்திட்டம் ஒன்றை அது முன்வைத்துள்ளது.

யாழ்ப்பாண கிறித்தவ ஐக்கியம்
எழுப்புதற் கூட்டங்கள்
2, 3, 4 ஆவணி 1979.
திறிம்மர் மண்டபம், யாழ்ப்பாணம்,
பேச்சாளர்கள்: கனம் ஜோர்ஜ் E குட், M A
(முன்னைநாள் தலைவர், ஐயலாந்து மெதடித்த திருவவை)
திரு S D தங்கத்துரை
(நற்செய்திப் பணியாளர், இலங்கை மெதடித்த திருஅவை)
நாளாந்த நிகழ்ச்சிகள்
9-30 மு ப — திருமறைப் படிப்பு
5-00 பி ப — பாடல்கள்
6-00 பி ப — நற்செய்திக் கூட்டம்
கனம் கிங்சிலி தே. முத்தையா,
செயலாளர்.
V. கனகசபை,
தலைவர். 3212

உ
பூப்பு நீராட்டு
எமது புதல்வி செல்வி சந்திரவதனவுக்கு பூப்பு நீராட்டு வைபவம் நாளை (3-8-1979) வெள்ளிக் கிழமை காலை பத்து மணிக்கு நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் தயவுசெய்து இதனை ஏற்றுக்கொண்டு, செல்வியைச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.
இதனையே அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.
இராஜவீதி, மு. ஆறுமுகசாமியும்
தோப்பு, அச்சுவேலி. (ஈழநாடு லிமிட்)
3209 துணைவியாரும்

## சீமெந்து விநியோகம்

சீமெந்து பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் தபால் மூலம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் கிடைத்து (04) நான்கு வாரங்களுக்குள் பாவனையாளர்களுக்கு சீமெந்து விநியோகிக்கும் திகதி அறிவிக்கப்படும்.

தொழிற்சாலை

முகாமையாளர்.

3194

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

இல: 1068 T

காலஞ்சென்ற அல்வாய் மேற்கைச் சேர்ந்த சுந்தரவனம் சிதம்பரப்பிள்ளையின் மரணசாதனமில்லாது விட்டிறந்த சொத்துக்கள் சம்பந்தமாக

மரணமெய்தியவர்

சுந்தவனம் சிதம்பரம்பிள்ளை கைம்பெண் இராசேஸ்வரி, அல்வாய் மேற்கு.

மனுதாரர்

எதிராக

1. சிதம்பரப்பிள்ளை ஞானகுமாரன் (பராயமற்றவர்கள்)
2. சிதம்பரப்பிள்ளை உதயகுமாரன் (பராயமற்றவர்கள்)
3. சிதம்பரப்பிள்ளை மகள் றஞ்சனி
4. சுந்தவனம் அருளானந்தம் யாவரும் அல்வாய் தெற்கு, அல்வாய்.

பிரதிவாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்துக்களுக்கு எதிராகத் தத்துவம் பெறுவதற்கு மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு ஆவணி மாதம் 3-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1979-ம் ஆண்டு ஆடி மாதம் 16-ந் திகதி

நீதிமன்றக்கட்டளைப்படி

க. விஸ்வலிங்கம்,
பதிவாளர்.

வரைவு:
S. சபாபதிப்பிள்ளை,
மனுதாரின் சட்டத்தரணி

3197

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

குரும்பசிட்டி என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தையா நவரத்தினம் என்பவரினது மரணசாதனத்தினதும் எழுத்தாவணத்தினதும் விடயத்தில்

மரணமெய்தியவர்

நவரத்தினம் அசோக்குமார், குரும்பசிட்டி, தெல்லிப்பழை

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. T/40

எதிராக

1. நவரத்தினம் கைம்பெண் பராசக்தி
2. நவரத்தினம் சிறிஸ்கந்தகுமார்
3. நவரத்தினம் மகள் சிவாஜினி
4. நவரத்தினம் மகள் வசந்தினி (பராயமற்றவர்)

எல்லோரும் குரும்பசிட்டி, தெல்லிப்பழை 4-ம் எதிர்வாதி பராயமற்றவர் தனது பாதுகாவலராக நியமிக்கப்படவிருக்கும் 1-ம் எதிர்வாதி மூலம்

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி

மு. நல்லலிங்கம்,
பதிவாளர்.

1979-ம் ஆண்டு ஆனி மாதம் 19-ந் நாளன்று திகதியிடப்பட்டது

தயாரித்தவர்;
ச. பரமநாதன்,
மனுதாரின் சட்டத்தரணி.

3200

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## சங்கச் செய்திகள்

கிளிநொச்சி- கரைச்சிதெற்கு ப. நோ. கூ. ச. சங்கத்தைச் சேர்ந்த கிளைகளின் தெரிவுகளில் பின்வருபவர்கள் தலைவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மேற்கு -பண்டிதர் க. பேர., ஆ. நாதர், கிளிநொச்சி கிழக்கு- ப. மகாலிங்கசிவம், இரணைமடு கிழக்கு-கு நல்லையாபிள்ளை, திருநகர் நா. வேலாயுதம், கணேசபுரம்-மு. தர்மராசன், கனகபுரம்-கு சந்திரசேகரம்பி. ஜெயந்திநகர் த. சிதம்பரப்பிள்ளை, உருத்திரபுரம்- ச. பொன்ராசா, விசுவமடு - தா. நடராசா, அக்கராயன்குளம்-வி. சுப்பிரமணியம், இராமநாதபுரம்- நா. சற்குணராசா, இராமநாதபுரம் படித்த வாலிபர் திட்டம் -ச. இரத்தினம், வட்டக்கச்சி- நா. தம்பையா [கு]

ஃ ஃ ஃ

[ஊரெழு]

வலிகாமம் கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒன்பதாம் இலக்க ஊரெழு கிளையின் நிர்வாகசபை உத்தியோகத்தர்கள்.

தலைவர்; திரு. மு. வீரசிங்கம், உபதலைவர்: திரு. க. கனகசூரியர், செயலாளர்: திரு. ந கணேஸ். [கு]

ஃ ஃ ஃ

[மாவிட்டபுரம்]

கொல்லங்கலட்டி சடச்சட்டை வைரவர் ஆலய பரிபாலன சபையின் வருடாந்த நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்: திரு. வ. கந்தசாமி செயலாளர்: நா போஜன் பொருளாளர்: வி. பழனி உறுப்பினர்கள்: து. குகனேசன், த. சின்னத்தம்பி, சி பாலசிங்கம், ம. சின்னத்துரை

ஃ ஃ ஃ

[வண்ணார்பண்ணை]

மண்டைதீவு கண்ணகை அம்மன் கோவில் 17வது வருடாந்தப் பொதுக் கூட்டம் பரிபாலன சபைத் தலைவர் திரு. வி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் திரு வி சோமசுந்தரம், உப தலைவர் திரு ஐ. க நடராசா செயலாளர் திரு. ஏ எஸ் சோமசுந்தரம், உபசெயலாளர் திரு கு க பரமானந்தம் பொருளாளர் திரு ந. நடேசமூர்த்தி, எட்டுப் பேர் கொண்ட செயற்குழுவும் தெரியப்பட்டது

ஃ ஃ ஃ

[சித்தன்கேணி]

கலைநகர் கம்பப்புலோ ஆதிவைரவப் பெருமான் ஆலய அபிவிருத்திச்சபை பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்

காப்பாளர்: திரு தா திருநாவுக்கரசு [பா. உ] தலைவர்: திரு ஆ சதாசிவம் [ஆசிரியர்] செயலாளர்: திரு வீர சுப்பிரமணியம், பொருளாளர்: திரு பொன் தெண்டாயுதபாணி பரிசோதகர்: செல்வன் வே த கதிர்காமநாதன் நிர்வாக சபை உறுப்பினர்கள் 9 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்

ஃ ஃ ஃ

[புலோலி]

பருத்தித்துறை நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய தருமபரிபாலன சபை நிர்வாகக்குழுத் தெரிவுக் கூட்டம் திரு சி மு கந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர் சி மு கந்தசாமி ஜே. பி உபதலைவர் சோ. இராமலிங்கம், செயலாளர் வே பரமகுரு உபசெயலாளர் வ சிவலிங்கம். பொருளாளர் சே சபாநாதன். கணக்குப் பரிசோதகர் மு செல்லவிநாயகம் ஐவர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (கு)

## விண்வெளியில் முதல் ரேடியோ டெலஸ்கோப்

மாஸ்கோ, ஆக.1

"டாஸ்" விசேஷ நிருபர் நிகோலாய் ஷெவலேவ் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து எழுதுவதாவது:

'சல்யூட்-6' விண்வெளி நிலையத்தில் முதலாவது ரேடியோ டெலஸ்கோப் சாதனம் பொருத்தப்பட்டுள்ளது இதற்கு முன்வேறு எந்த விண்வெளிக் கலங்களிலும் இது போன்ற பெரிய நுட்பமான விஞ்ஞான சாதனம் பொருத்தப்பட்டிருந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சோவியத் யூனியன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா நாடுகளின் ரேடியோ விண்வெளியியல் நிபுணர்களது ஒத்துழைப்பில் விலைவாக தொலைவில் உள்ள நட்சத்திரக் கூட்டங்களை ரேடியோ டெலஸ்கோப் உதவியுடன் ஆராய்வது என்பது ஆண்டுகளில் சாத்தியமாயிற்று இப்போது ரேடியோ டெலஸ்கோப் விண்வெளிக்கு அனுப்பியிருப்பதானது விண்வெளி பௌதிக இயலில் ஒரு புதிய கட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. [இ]

## மண்சரிவுக்கு 6 பேர் பலி!

பம்பாய், ஆக 1

பம்பாயில் பெய்த பெருமழையை அடுத்து ஏற்பட்ட மண்சரிவினால் 6 பேர் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டது [இ]

## கேள்வி அறிவித்தல்

ஆனையிறவில் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு பின்வரும் கற்கள் விநியோகிப்பதற்கு ரூபா 1,00,000/-க்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன

385 கியூப் 6''—9'' கற்கள்
67 கியூப 2'' கற்கள்
88 கியூப் ¾'' கற்கள்

கேள்விப்பத்திரங்கள் ரூபா 200/- செலுத்தி பிரதான பொறியியலாளர் (பெருந்தெருக்கள்) யாழ்ப்பாண அலுவலகத்தில் ஆகஸ்ட மாதம் 8-ந் திகதிவரை 10-00 மணி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம் ஆகஸ்ட் மாதம் 15-ந் திகதி பிற்பகல் 2-00 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் மேலும் விபரங்கள் தேவைப்படின் பிரதான பொறியியலாளர் (பெருந்தெருக்கள்) யாழ்ப்பாண அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. கணேசரத்தினம்,
பிரதான பொறியியலாளர்
(பெருந்தெருக்கள்),
யாழ்ப்பாணம்

இல. 761, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்,
திகதி: 30-07-79. 3207

## விளம்பரம்

### தேவை

தையல் வேலையில் அனுபவம் உள்ள பெண்கள் இருவர் தேவை. நேரில் வரவும். வேலைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும் காமில் அருஸ், (மத்திய பஸ் நிலைய முன்றலில்), 39/9, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 3186

### வாடகைக்கு

பிரேத, தட்டுக்கூட்டு ஆகிய வற்றை கொண்டு செல்ல விற்பனை செய்யும் வண்டிகளும் பொருட்களும் வாடகைக்குக் கொடுக்கப்படும் எம். ஆர். டி. சில்வா, 121, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்

3204

### பயிற்சி

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீன முறையில் பயிற்சிகள் வெல்டிங் (Electric Arc & GAS) இலெக்ட்ரிக் வயறிங் ரேடியோ (Transistor) Building Technology P M G Certificate முதலிய பயிற்சிகளுக்கு National Institutes, 57, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

3173

### அறிவித்தல்

காணி, வீடு வாங்க, விற்க, வாடகைக்கு கொடுக்க ஆலோசியுங்கள்.

முகாமையாளர்,
த. பெ. எண் 90
யாழ்ப்பாணம். 320

## பிரேமா- எலிசபெத் சந்திப்பு

லண்டன், ஆக 1

இலங்கை பிரதமர் திரு. ஆர் பிரேமதாசா நேற்று லண்டனில் எலிஸபெத் மகாராணியைச் சந்தித்து உரை நிகழ்த்தினார்

பிரிட்டிஷ் மகாராணி திரு. பிரேமதாசாவுக்கு பகல் போசன விருந்தளித்து கௌரவித்தார். [இ]

## பாராளுமன்ற பகிஷ்கரிப்பை கைவிட முடிவு

சாலிஸ்பரி, ஆக 1

ரொடீஷிய எதிர்க்கட்சியான வணக்கத்துக்குரிய சித்தோலேயின் சிம்பாப்வே ஆபிரிக்க தேசிய முன்னணி இதுவரை மேற்கொண்ட பாராளுமன்ற பகிஷ்கரிப்பை கைவிடத் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது [இ]

## அரசாங்க ரெண்டர்

### பெருந்தெருக்கள் திணைக்களம்

யாழ்ப்பாணம் — காங்கேசன்துறை வீதியில் 11 50 மைல்களுக்கு மதிப்பு செய்தல் Survey Plan மதிய வரைபடங்களைத் தயாரிப்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் உத்தரவு பெற்ற நில அளவையாளரிடமிருந்து வரவேற்கப்படுகின்றன

கேள்வி விண்ணப்பப் படிவங்கள் 15-ந் திகதி ஆகஸ்ட் 1979 வரை விநியோகிக்கப்படும் விண்ணப்பங்கள் 24-ந் திகதி ஆகஸ்ட் 1979 பிற்பகல் மூன்று மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

மேலதிக விபரங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். கணேசரட்ணம்,
பிரதம பொறியியலாளர்,
(பெருந்தெருக்கள்)
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியிலாளர்
அலுவலகம்,
(பெருந்தெருக்கள்) யாழ்ப்பாணம்.
30- 7-79

3206

## மரண அறிவித்தல்

### திருமதி கண்மணி பாலசிங்கம்

திருமதி கண்மணி பாலசிங்கம் காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற திரு. பொ. பாலசிங்கம் (இளைப்பாறிய தபால் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி தேசமணி நடராசா திரு. ச. விஜயரட்ணம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்;

இவரது இறுதிக்கிரியைகள் கொழும்பில் வியாழக்கிழமை (02-08-79) காலை நடைபெறும்;

D/2/6 Elviligala Flats,
Elvitigala Mawatte,
Colombo 8.

த. தவராசலிங்கம்.

3205

# ஒரு 'கோமாளி' 'கிங்மேக்கர் ஆகின்றார்!

"ஆசியாவிலேயே மிகப் பெரிய ஜனநாயக அரசு ஒன்றை உருவாக்கிய ஜனதாக் கட்சி எக்காரணத்தாலும் உடைந்து போய்விடக் கூடாது" என்று, ஜனதாவில் உட்பூசல்கள் ஏற்பட்டு நீறுபூத்தநெருப்பாகக் கனன்ற போது அன்றைய சுகாதார அமைச்சர் ராஜ்நாராயண் கருத்துவெளியிட்டிருந்தார்.

ஆனால் இன்று ஜனதா சிதறிச் சின்னாபின்னமாகிய தற்கு முதற் காரணகர்த்தாவாக அகிலஉலகத்திலும் கருதப்படுபவர் ராஜ்நாராயணே ஆவர்!

"அரசாங்கத்தின் மதிப்பு நாளடைவில் அதில் அங்கம் வகிக்கும் தனிநபர்களின் தகுதியேயாகும்" என்று ஸ்டுவார்ட்மில் என்பவர் கூறியுள்ளார் இந்திய அரசியலில் நேரு, இந்திராகாந்தி முதலியோர் இம்மதிப்பைக் காப்பாற்றி வந்தனர் என்று கூறலாம்.

நூறு வயதை எட்டிக் கொண்டிருக்கும் பழம்பெரும் காங்கிரஸ்கட்சி, 1969ம் ஆண்டுவரை சுதந்திர பாரதத்தை ஆட்சிசெய்து வந்தது.

## புத்தொளி

1969ம் ஆண்டு காங்கிரஸ் இரண்டாக உடைந்தபோது அப்போது ஆட்சியில் இருந்த இந்திராகாந்தியின் தலைமையின் கீழ் காங்கிரஸ் புதிய காங்கிரஸ் புதிய பலம் பெற்றது. இந்திராவுடன் கருத்து வேறுபட்டுப் புதிய கட்சியாக ஜெகஜீவன்ராமின் தலைமையில் உருவானது ஜனநாயகக் காங்கிரஸ்

பாரம்பத்தில் 21 மாதகால அவசரகால அல்லல்களிலிருந்து விடுபட ஜனதா தோன்றியது. 1977ல் ஜனதா பல்வேறு கட்சிகளைக் கட்டியணைத்து இந்திராவின் மதிப்பைக் குறைத்து ஆட்சிபீடமேறியது.

ரேபரேலி தொகுதி இந்திராவின் தொகுதியாக இருந்தது அவருடன் முன்னர் போட்டியிட்டவர்தான் ராஜ்நாராயண். 1977ல் அவர் தேர்தலில் தீவிரப்பிரசாரம் செய்துவரும்போது ஒருகட்டத்தில் பின்வருமாறு கூறினார். "என் வெற்றி எப்பவோ நிச்சயிக்கப்பட்டுவிட்டது இந்திரா இத் தேர்தலில் வெற்றிபெறுவதுதான் அதிசயத்திலும் அதிசயம்"

அவர் சொல் இத் தேர்தலில் அம்பலம் ஏறியது தனிமனித மதிப்பு அரசியலில் 1977ல் வீழ்ச்சியுற்றது.

ராஜ்நாராயணன் வெற்றி பெற்றதும் "நான் ஜெயிக்கவில்லை. தருமம்தான் ஜெயித்தது காலம்தான் எல்லாவற்றிற்கும் மருந்து என்றார்.

இந்திராவுக்கு எதிரான பத்திரிகைகளோ, பாரத பிரதேசத்தில் "21 மாத கஷ்டங்களிலிருந்து மக்கள் விடுபட்டு சுதந்திரக்காற்று வீசவைத்த காரணகர்த்தா ராஜ்நாராயணன்தான்" என்று எழுதி பாரதத்தின் கதாநாயகனாக அவரை உயர்த்தி வைத்தன.

ஜனதாவில் சுகாதார அமைச்சராக விளங்கிய ராஜ்நாராயண் பிரதமர் உட்பட பெருந்தலைவர்களுக்கு அமைச்சர்களுக்கும் பெருந்தலையிடியாக இருந்தார்; பகிரங்கக் கூட்டங்களிலெல்லாம் பிரதமரை அவர் கண்டித்துவந்தார்! பாரதப்பிரதமர் அமெரிக்கா சென்றதும் ராஜ்நாராயண் கண்டனத்தைக் கடுமையாக்கினார். அப்போது மத்திய அமைச்சர்கள் அவரைச் சமாதானம் செய்வதற்கு பகல் இரவாக அவர் இல்லம் அலைந்து திரிந்தார்கள். ராஜநாராயண் எதற்கும் விட்டுக்கொடுக்கவில்லை பாரதப் பிரதமர் தேசாய் அமெரிக்காவிலிருந்து திரும்பியதும் ராஜ்நாராயண் விமானநிலையம் சென்று அத்தரை அவர் மேல் தெளித்து வரவேற்றார் ராஜ்நாராயணனுக்கு அத்தரில் மிகவும் பிரியம் அதனை அன்றுடம் உபயோகிப்பதுடன் நண்பர்களுக்கும் தெளித்து மகிழ்வார்.

ஏற்கனவே ராஜ்நாராயணனின் கண்டனங்களை பொறுத்துக்கொண்டிருந்த பாரதப் பிரதமர் தேசாய் "அரசியலில் சேற்றை என்மேல் அள்ளி வீசிக்கொண்டு இன்று சென்டையா என்மீது வீசுகிறீர் என்று எரிந்துவிழுந்தார்.

ஜனதாபதவியேற்று 15மாதங்களின் பின் ராஜ்நாராயண் அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்றப் பட்டார். இவரைத் தொடர்ந்து இவரது நெருங்கிய சகாவான இன்றைய பிரதமர் சௌத்திரி சரண்சிங் வெளியேறினார். முன்னாள் பாரதப் பிரதமர் தேசாயின் வலதுகரமாக கணிக்கப்பட்ட சௌத்திரி சரண்சிங் வெளியேறியதும் இந்திய அரசியலில் பெரும்நெருக்கடி ஏற்பட்டதென்று சொல்லலாம்.

ராஜ்நாராயண் வெளியேறியதும் மொரார்ஜியை "சர்வாதிகாரி" என்று அவர் வர்ணித்தார். ராஜ்நாராயணனை பதவியிலிருக்கும்போதே பத்திரிகைகள், கோமாளி என்று வர்ணித்துவந்தன "வந்தானய்யா வந்தான் நாகரிகக் கோமாளிவந்தானய்யா" என்று கார்டூனும் போட்டன. நேற்றுவரை அரசியலில் தனது வாய்ப்புக்களைப் போட்டுடைத்த பொரிமாத்தோண்டியாக இருந்ததாகக்கருதப் பட்ட அவர், இன்று பாரதத்தில் எல்லாராலும் ஏற்றிப் பேசப்படும் ஒருவராக மிளிர்கின்றார்.

ராஜ்நாராயண் செல்லுமிடமெல்லாம்மக்கள் கரகோஷம் செய்து வரவேற்கிறார்கள். அரசியலில் மாறுபட்ட கருத்துள்ளோரும் அவரின் சாணக்கியத்தை எண்ணி மூக்கின் மேல் விரலைவைத்து வியக்கின்றார்கள்

ராஜ்நாராயண் காந்திஜியின் வழிவந்த தலைவர். அவர் தியாகி லோகியாவின் பரமானந்தசீடர். நிறைந்த கடவுள் நம்பிக்கை உடையவர். சூதுவாது தெரியாதவர்; எதையும் ஒளித்துப் பேசத்தெரியாதவர். திருப்பதி பாலாஜியின் பரமபக்தர்; அவரை வணங்காமல் எக்காரியத்தையும் செய்யமாட்டார்.

அவரது பொழுதுபோக்கு தேச சேவை என்கிறார். அவருக்கு ஒரே ஒரு பிரச்னை-சற்றே சோர்வு கண்டால் மற்றொரு பிரச்னையை எடுத்துக்கொள்வார். அவ்வளவுதான். அவர் தனது வாழ்நாளில் சினிமா பார்த்ததில்லை. சினிமா என்ன வென்றே அவருக்குத் தெரியாதாம்.

தனது குடும்பத்தைப் பற்றி அவர் அலட்டிக்கொள்வதில்லை கிராமத்தில் அவர் குடும்பம் அமைதியாக வாழ்கின்றது.

விழித்திருக்கும் போதெல்லாம் நாட்டுக்காக உழைக்கின்றார். இதற்கு எடுத்துக்காட்டாக பாரதத்தில் இன்று நடைபெற்று வரும் சம்பவங்களைக் காணலாம்.

பிரதமர் சரண்சிங் மீண்டும் ஜனதாவில் சேர்ந்து துணைப் பிரதமராக பின்னரும் வெளியிலிருந்து விதுரனைப்போல் விளங்கி ஜனதாவை அக்கு வேறு ஆணிவேறாகப் பிளவு படச்செய்தவர், ராஜ்நாராயண், சரண்சிங் ஜனதாவில் இருக்கவே 90 ஜனதா உறுப்பினர்கள் பிரிந்து ராஜ்நாராயணைத் தலைவர்களாக ஏற்றார்கள் என்றால் பாருங்களேன்!

பல்வாய்ந்த அரசியல்

(5-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### மணல்ஏற்றுவதை தடைசெய்க!

வல்லிபுரக் கோவில் சுற்றாடலில் களவாக மணல் ஏற்றும் சட்டவிரோதச் செயல், தொடர்ந்து நடைபெற்றுவருகிறது "ஈழநாடு" பத்திரிகையில் பலமுறை இதுபற்றிய செய்திகளையும், எச்சரிக்கைகளையும் பிரசுரித்து உதவியிருந்தும் இதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலையிலிருக்கின்றோம்!

கண்ணாடித் தொழிற்சாலை ஒன்று வடபகுதியில் நிறுவுவது நீண்டகாலத் திட்டமாக இருந்துவருகிறது ஆனால், அது சாத்தியமாகும் சூழ்நிலை தற்போது ஓரளவு அனுகூலமாகி வருகிறது. பிராந்திய அமைச்சர், மாவட்ட செயலாளர் ஆகியோர் இதுபற்றி பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டிருக்கின்றார்கள். எனவே, முதலில் செய்யவேண்டிய பெரும் கடமை, இவ்விதம் களவாக மணல் ஏற்றுவதைத் தடை செய்யவேண்டியதாகும்.

மாவட்ட செயலாளருக்கும், நடவடிக்கை எடுக்குமாறு கோரி வேண்டுகோள் விடுத்திருக்கின்றோம். மேலான அதிகாரத்தைப் பிரயோகித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அவரைக் கேட்டுக்கொள்ளோம். இது சம்பந்தமான நடவடிக்கைகளை பொது மக்களும் மனம்வைத்து மேற்கொள்ளவேண்டும்.

கே. வி. செல்வராசன்
(செயலாளர்)

பெரியதேவனத்தாய்
சனசமூக நிலையம்,
புலோலி.

0 0 0

### ப. நோ. கூ. சங்க கிளைத் தேர்தல்

28-7-79 ம் திகதி வெளியிடப்பட்ட 'ஈழநாடு' பத்திரிகைச் செய்தியில் மண்டைதீவு ப. நோ. கூ. சங்க தேர்தல் முடிவுகளைப்பற்றி வெளியான செய்தி உண்மைக்கு மாறானது. இத்தேர்தலில் போட்டியிட்ட எவரும் கட்சி சார்பானமுறையில் போட்டியிடவில்லை மூன்று குழுக்களாகப் பிரிந்தே போட்டியிட்டார்கள். இத்தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் மூன்று குழுக்களிலிருந்துமே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்

மேலும் இருவர் தவிர்ந்த மற்றைய ஏழு பேரும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிரானவர்கள் என்று வெளிவந்த செய்தியில் எதுவித உண்மையும் இல்லை. தேர்ந்தெடுக்கப் பட்டவர்களில் அநேகமானோர் த. வி. கூட்டணியின் ஆதரவாளர்களே.

கே. சிவகுலசிங்கம்
மண்டைதீவு

## நல்லை நகர் வலம் வரும் செவ்வேள்

காரிமின்னொடு உலாவுதென் நல்லைநகர் வேலன்
பார்புகழும் பாவினொளி பரவியவர் மேவி
காரிருளைச் சிக்குமெய் ஞானிறது வன்னப்
பேரருளே விஞ்சியொளிர் நல்லைவலம் வந்தான்.
oo oo
ஆறுமுக மானபொருள் அறுபொருளும் காட்டி
தேறுமுக மானதொரு கலாபமயில் மேலே
கூறுமடியார் வினைகள் தீர்த்தருளும் செவ்வேள்
பேறுபெறத் தந்தருள நல்லைவலம் வந்தான்.
oo oo
வேதத்தி னுச்சிநற் கோபுரத்தின் மேவி
காதலின் மிக்கடியார் கசிந்துருக மல்கி
நாதவித்த வவர்தமக்கு வேலதனைக் காட்டி
பூதலிக்கும் நல்லைவலம் வேல்முருகன் வந்தான்.
oo oo
பிரணவப் பொருளறியப் பிரமனையே முன்னாள்
சிரமதனிற் குட்டியே சிறைதனிலே வைத்து
தரமிதந்த பொருளதனைச் சிவனவனுக் கீந்த
வரந்தருஉம் வடிவேலன் நல்லைவலம் வந்தான்.
oo oo
விண்ணெ பாருவு தேரின்வலம் வீரன்வரு போழ்தில்
பண்ணெழுகும் பாவடியார் பரிந்துநனி சூழ்ந்து
அன்புருகி என்புருகி நைந்துருகி நிற்ப
மின்பொருவு வேலினொடு நல்லைவலம் வந்தான்.
oo oo
கோலமா மஞ்ஞைதனில் குலவி விளையாடும்
பாலனென் றம்மொழி பரவிய பொற்குமரன்
சாலஞ் செய் தேவரையும் தன்வயமே யாக்கி
கோலஞ்செய் கோவிவிடை நல்லைவலம் வந்தான்.
oo oo
தாளிற் சிலம்பொலி கணீர்கணீ ரென்னக்
கோவின் மறைப்பொருள் வானகம் நின்றெழ
நாளிற் பனுவலுந்தான் பாரினிடை கூட
வாழிய சண்முகனும் நல்லைவலம் வந்தான்.
& oo
கற்பூர தீபத்தில் கரைந்துறையும் கந்தன்
பொற்பூரும் காவடியில் பொலிந்து நனிமேவி
அன்பூரும் அடியார்க்கு அபயகரம் நீட்டி
இன்பூர வணைந்திடவே நல்லைவலம் வந்தான்.
oo oo
பாவடியார் பண்ணுடனே பாடியடி பணிய
சேவடியோன் கட்டுண்டு அவர்க்கருள் சுரக்க
செவ்வேலன் திறங்கண்ட மஞ்ஞை நடமாடக்
காவலன் தாவியொளிர் நல்லைவலம் வந்தான்.
oo oo
பற்றற்றான் பற்றினைப் பற்றிவிடாப் பக்தர்
சுற்றுமல் சுற்றியே மயிலவனைச் சூழ
சந்தாகிச் சித்தனாய் உலகெலாந் தானாகி
வித்துக்கு வித்தனாய் நல்லைவலம் வந்தான்.

ஏழாலை
- வித்துவான் ச. தங்கவடிவேல்

## "பிறமொழிக் கலப்பற்ற தூய தமிழை வளர்ப்போம்"

### துறவிகள் திருக்கூட்டம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"தமிழர்களின் முக்கியத்துவம் வாய்ந்த கலைகளாகிய மொழிகளை விரும்பிக் கற்பதோடு நின்றுவிடாது சால மொழிகளுக்கும் மூத்த முதல் மொழியாகிய தமிழில் பிற மொழிகளைக் கலக்கவிடாது, தூய தமிழை உலகெங்கும் நல்ல முறையில் பரப்ப எல்லோரும், முன்வரவேண்டும்"

இவ்வாறு கோரும் துண்டுப் பிரசுரமொன்றை அகில இலங்கை இந்துமத குருபீடத் துறவிகள் திருக்கூட்டம், 28-வது ஆண்டு அறிவித்தல் என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது.

திருக்கூட்டத்தினர் 1978-ம் ஆண்டு பிரணவக்கொடி தாங்கி ஊர்வலம், ஆலயபூசை உழவாரப் பணிவிடை, கூட்டுப் பிரார்த்தனை, சன்மார்க்கச் சொற்பொழிவு நடாத்திய விபரங்களும் இப்பிரசுரத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

திருக்கூட்டத்தினர் இம் மாதம், 9-ந் திகதி வியாழக்கிழமை, கதிர்காமத்திலிருந்து பிரசாரக்கடமைகளுக்கு புறப் படவுள்ளனர். (லெ)

## விஞ்ஞான ஆசிரியர்கள் விரைவில் நியமனம்

[யாழ்ப்பாணம்]

இலங்கைத் தொலைக் கல்வி நிறுவனத்தில் விஞ்ஞான-கணித பயிற்சி நெறிகளைப் பயிலும் மாணவர்களுக்கு விரைவில் கல்வி அமைச்சு விஞ்ஞான ஆசிரிய நியமனங்களை வழங்கவுள்ளது இவ்வாறு தெரிவு செய்யப்படும் விஞ்ஞான ஆசிரியர்கள் 2,750 ரூபா வருடாந்த சம்பள அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள்.

க. பொ. த உயர்தர விஞ்ஞான-கணித ஆசிரியர்களுக்கு பாடசாலைகளில் நிலவும் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு இம் முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளதாகவும் கல்வியமைச் சின் வட்டாரங்களிலிருந்து

(5-ம் பக்கம் பார்க்க)

## அராலி விநாயகர் வருடாந்தஉற்சவம்

(வட்டுக்கோட்டை)

அராலி கரைப்பிட்டி விநாயகராலய வருடாந்த உற்சவம் சென்றமாதம் 29ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. இம்மாதம் 6ம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் 7ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவிருக்கின்றது.

சிறப்புநிகழ்ச்சியாக தினமும் இரவு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாசாரிய சுவாமிகள் கந்தபுராண சொற்பொழிவுகள் நிகழ்த்திவருகிறார்.

# ஈரானின் ஆட்சி மற்றொரு சர்வாதிகாரியிடம்

## முன்னாள்பிரதமர் பக்தியார் கவலை

தெஹ்ரான், ஆக 1

ஈரானில் ஆயத்தொல்லா கொமேனியின் சர்வாதிகார ஆட்சியே இன்று நடைபெறுகிறது. ஒரு சர்வாதிகாரியான மன்னர் ஷாவிடமிருந்து மற்றுமொரு சர்வாதிகாரியான ஆயத்தொல்லா கொமேனியிடம் ஈரானிய ஆட்சிபீடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

இவ்வாறு ஈரானிய முன்னாள் அதிபர் டாக்டர் பக்தியார் தெரிவித்துள்ளார்.

முன்னாள் மன்னர் ஷாவினால் நியமிக்கப்பட்ட கடைசிப் பிரதமரான டாக்டர் பக்தியார் கடந்த பெப்ரவரி மாதம் நாட்டைவிட்டுத் தப்பி ஓடியபின்னர் தற்போது பாரிஸில் தாம் தங்கியிருப்பதாக அறிவித்துள்ளார்.

ஈரானில் இம்மாதம் 3-ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் ஈரான அரசியல் அமைப்பு நிர்ணயசபைத் தேர்தலில் தாம் வேட்பாளர்களை நியமிக்கப்போவதில்லை என்றும் ஈரானிய இஸ்லாமிய அரசில் தமக்கு நம்பிக்கை கிடையாதென்றும் டாக்டர் பக்தியார் தெரிவித்துள்ளார் (இ)

# மீன்பிடி வள்ளங்கள் இனி தாமதமின்றிக் கிடைக்கும்

(புலோலி)

கடற்றொழிலாளர்கள் தாமதமின்றியும் இலகுவாகவும் மீன்பிடி வள்ளங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வகை செய்யப்படவிருக்கிறது மீன்பிடி வள்ளங்கள் பெறுவதற்காகச் செய்யப்படும் ஒப்பந்தத்தை இனிமேல் கடற்றொழில் திணைக்களத்துடன் நேரடியாகச் செய்துகொள்வதற்கு கடற்றொழில் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதுவரைகாலமும் கடற்றொழிலாளர்கள் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுடனேயே வள்ளம்பெறுவதற்கான ஒப்பந்தங்களைச் செய்துவந்தனர். இம்முறையில் கடற்றொழிலாளர்கள் பல சிரமங்களை அனுபவித்துவந்ததை கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்ததைத் தொடர்ந்து கடற்றொழிலாளர்கள் தமக்குத் தேவையான மீன்பிடி வள்ளங்களைப் பெற்றுக்கொள்வதற்கு கடற்றொழில் அதிபருடன் ஒப்பந்தம்செய்து வள்ளங்களைப் பெற்றுக்கொள்வதற்கேற்ற இலகுவான வழியை கடற்றொழில் அமைச்சு ஏற்படுத்தியுள்ளது.

இத் திட்டத்திற்கமைய வடமராட்சிப் பகுதி மீனவர்கள் பெற்றுக்கொண்ட வள்ளங்களுக்கான ஒப்பந்தங்கள் கடற்றொழில் அதிபருக்கு மாற்றப்பட்டுள்ளன. இந்தப் புதிய திட்டத்தால் மீனவர்கள் தமக்கு பெருநன்மையேற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (க)

இந்திரா காங்கிரஸ்

# ஆதரவளிக்க முன்வந்தால் ஜனதா ஏற்கத்தயங்காது

## சந்திரசேகர் கருத்து

புதுடில்லி, ஆக 1

'ஜனதா—எஸ்' — காங்கிரஸ் கூட்டரசாங்கம் இந்திய லோகசபையின் நம்பிக்கையைப் பெறத்தவறும் பட்சத்தில் இடைக்காலத் தேர்தல் ஒன்று நடைபெறக்கூடிய வாய்ப்பு எதுவும் கிடையாது

இவ்வாறு ஜனதாக் கட்சித் தலைவர் திரு சந்திரசேகர் நிருபர்களிடம் பேசுகையில் கூறினார்.

புதிய அரசு லோகசபையின் நம்பிக்கையைப் பெறத் தவறினால் ஜனாதிபதி மாற்று நடவடிக்கையாக ஜனதா கட்சியையே புதிய அரசு அமைக்க அழைப்பார் என்றும், அவ்வாறு அழைக்கும்பட்சத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சி ஆதரவளிக்க முன்வந்தால் அதை ஜனதா கட்சி ஏற்றுக்கொள்ளத் தயங்காதுஎன்றும் திரு சந்திரசேகர் கூறினார்

இதேவேளையில் ஜனதா கட்சி பாராளுமன்றக் குழுத் தலைவர் திரு ஜெகஜீவன்ராமும் இந்திராகாங்கிரஸ் பாராளுமன்றக் குழுத் தலைவர் திரு ஸ்டீபனும் நேற்று சந்தித்து பேச்சுநடத்தியதை அடுத்து இவ்விரு கட்சிகளுக்குமிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்படலாம் என அரசியல் அவதானிகள் கருத்துத்தெரிவிக்கின்றனர். (இ)

தென் ஆபிரிக்க விடுதலை இயக்கங்களுக்கு

# இந்தியாவின் ஆதரவு மீண்டும் வலியுறுத்தப்படும்

## புதிய வெளியுறவு அமைச்சர் அறிக்கை

புதுடில்லி, ஆக 1

லுஸாக்கா பொதுநல அமைப்பு நாடுகள் மாநாட்டில் இந்தியா தென்னாபிரிக்காவில் உள்ள விடுதலை இயக்கங்களுக்கு தனது அரசியல் பொது-அறநெறி ஆதரவை மீண்டும் வலியுறுத்தும்.

இவ்வாறு புதிய இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. எஸ் எம் மிஸ்ரா வெளியிட்டுள்ள முதலாவது உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவித்துள்ளார்

லுஸாக்கா மாநாட்டில் கலந்துகொள்ளும் இந்தியப் பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைமைதாங்கிச்செல்லும் திரு மிஸ்ரா புதுடில்லியை விட்டுப் புறப்படுவதற்கு முன்னர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசியநலனை முன்னிட்டு இந்தியா தொடர்ந்தும் மண்டலசார்பற்ற கொள்கையையே பின்பற்றும் என்றும் அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ)

# 351 முஸ்லிம் கைதிகள் விடுதலை

புதுடில்லி, ஆகஸ்ட் 1

புதுடில்லியில் அண்மையில் நடந்த ஆர்ப்பாட்டத்தை அடுத்து கைதுசெய்யப்பட்ட 351 முஸ்லிம்களையும் விடுதலை செய்யுமாறு பிரதிப் பிரதமர் திரு. வை. பி. சவான் உத்தரவிட்டுள்ளார். (இ)

# மற்றுமொரு சினிமா கொட்டகை தீப்பிடித்து சாம்பரானது

சென்னை ஆக 1

கோயம்புத்தூருக்கு அருகே காஞ்சிக்கோவில் என்ற இடத்திலிருந்த இடத்துக்கிடம் எடுத்துச்செல்லும் சினிமாக் கொட்டகை ஒன்றும் நேற்று தீப்பிடித்து அடியோடு சாம்பராகியது.

இறுதிக்காட்சி முடிந்த பின்னர் அதிகாலை மூன்றரைமணிக்கு தீப்பற்றிய இத்தியேட்டரில் காவலுக்கிருந்த ஒருவர் பலியானார் (இ)

தூத்துக்குடி [illegible] த்து:

# நீதி விசாரணைக்கு எம். ஜி. ஆர். உத்தரவு

தூத்துக்குடி, ஆக 1

தூத்துக்குடி சினிமா கொட்டகை தீவிபத்து தொடர்பாக நீதிவிசாரணை நடைபெறும் என்று தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஓய்வுபெற்ற நீதியரசர் ஒருவர் இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தி 3 மாதத்திற்குள் அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பார் என்றும் திரு. இராமச்சந்திரன் கூறினார்

இச்சினிமாக் கொட்டகைத் தீ விபத்தில் 102 பேர் பலியானது தெரிந்ததே. (இ)

# "ஜனதா மீண்டும் ஆட்சிக்குவருவதை கம்யூ. தடுக்கும்"

புதுடில்லி, ஆக 1

ஜனதா கட்சி எந்த வடிவிலென்றாலும் மீண்டும் ஆட்சிக்கு வருவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தடுத்தேதீரும்.

இவ்வாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசி திரு. சி. ராஜேஸ்வரராவ் தெரிவித்தார்.

# 'ஜனதா-எஸ்' கட்சிக்கு கொள்கைவகுக்க கமிட்டி

## ராஜ்நாராயண் தலைவர்

புதுடில்லி, ஆக. 1

"ஜனதா—எஸ்" கட்சி வழிகாட்டு நெறிகளை நிர்ணயிக்கும் பொருட்டு கொள்கை வகுக்கும் கமிட்டி ஒன்றை நியமித்துள்ளது

கட்சித் தலைவர் திரு. ராஜ்நாராயண் தலைமையிலான இக்குழுவில் பிரதமர் திரு. சரண்சிங், வெளியுறவு அமைச்சர் திரு. எஸ். எம். மிஸ்ரா, சுகாதார அமைச்சர் திரு. ரவிராய் ஆகியோருடன் மற்றும் சிலரும் இக்கமிட்டியில் அங்கம் வகிக்கின்றனர். (இ)

இடமாற்றம் கோரும்

# ஆசிரியர்கள் 10-ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவேண்டும்

(உடுப்பிட்டி)

1980ம் ஆண்டிற்கான ஆசிரியர் இடமாற்றங்கள் தொடர்பாக இடமாற்றம் கோரும் சகல ஆசிரியர்களும் தமது விண்ணப்பங்களை எதிர் வரும் 10ம் திகதிக்கு முன் பிரதேச மாவட்டக் கல்விப்பணிப்பாளருக்கு அல்லது பிரதம கல்வி அதிகாரிக்கு அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சு கோரியுள்ளது

மேல் மாகாணத்திற்கான இடமாற்றங்களைப் பொறுத்தவரையில் பின்வரும் தகுதிகளையுடைய விண்ணப்பங்களே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அறிவித்துள்ளது.

அவையாவன!

● ஆசிரியர் தற்பொழுது சேவையாற்றும் கல்வி மாவட்டம், பிரதேசம் கஷ்டப் பிரதேசமாயின் இவ்வருடம் டிசம்பர் 31ம் திகதியன்று அங்கு இருவருடங்கள் சேவையாற்றியிருத்தல் வேண்டும்

● ஊர்ப் பிரதேசத்திற்கு வெளியே கஷ்டப்பட்ட பிரதேசத்தில் குறைந்தது 4 வருடங்கள் சேவையாற்றியிருக்க வேண்டும்.

● கணவன் மனைவி தொடர்பான காரணங்களுக்காகக் கோரப்படும் இடமாற்றங்களாயின் ஆசிரியர் மேல் மாகாணத்திற்கு வெளியே உள்ள கல்வி மாவட்டம், பிரதேசத்தில் இவ்வருடம் டிசம்பர் மாதம் 31ம் திகதியன்று குறைந்தது இருவருடங்கள் தொடர்ச்சியாகச் சேவையாற்றியிருக்க வேண்டும்.

● பயிற்றப்பட்ட ஆசிரியர்களாயின் பயிற்சியின் பின் நியமனம் பெற்ற கல்வி மாவட்டம், பிரதேசத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31ம் திகதியன்று குறைந்தது இருவருடங்கள் சேவையாற்றியிருத்தல் வேண்டும்.

மேல் மாகாணத்திற்கு வெளியே இடமாற்றம் கோரும் சிங்கள மொழிமூல ஆசிரியர்களுக்கும், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மற்றும் மாவட்டங்களுக்கு வெளியே இடமாற்றம் கோரும் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கும் பிரஸ்தாப நிபந்தனைகளிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது. (க)

# சிறுமி மீது பலாத்காரம் புரிந்தாராம்

(யாழ்ப்பாணம்)

பத்து வயதுச் சிறுமி ஒருத்தியுடன் தகாத முறையில் நடந்துகொண்டவர் என்ற குற்றச்சாட்டின் மீது பதினொன்பது வயது பாடசாலை மாணவன் ஒருவன் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை கொல்லங்கலட்டியைச் சேர்ந்த பத்து வயதுச் சிறுமி மரக்கறி வாங்குவதற்காக அயலிலுள்ள ஒரு வீட்டுக்குச் சென்றபோது அந்த வீட்டிலிருந்த மாணவன் தோட்டத்திற்கு வரும்படியும் மரக்கறி பறித்துத் தருவதாகவும் கூறி தோட்டத்திற்கு அழைத்துச் சென்று தகாத நடத்தையில் ஈடுபட்டதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இச்சிறுமியை பரிசோதனை செய்த டாக்டர் நிலைமை மோசமாக இருப்பதால் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்குமாறு தெரிவித்ததைத் தொடர்ந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிறுமி அனுமதிக்கப்பட்டுள்ளார் சந்தேக நபரான மாணவன் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (கொ)

# பொலிசாருக்கு மும்மொழிப் பயிற்சி

(கொழும்பு)

பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு மும்மொழிகளிலும் தேர்ச்சி அவசியமென பொலிஸ் மாஅதிபர் திரு அனா செனிவரட்ன குறிப்பிட்டுள்ளார். இது சம்பந்தமாக ஆராய்வதற்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இது சம்பந்தமாக பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் பயிற்சி நெறியிலே தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளை உள்ளடக்குவது சம்பந்தமாக மேற்படிக் கல்லூரியின் இயக்குநரான சுபரின்டென்டன் டபிள்யு டி. சில்வாவுக்கும் ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

பொலிஸ் திணைக்களவட்டாரங்கள் இது பற்றிப் பிரஸ்தாபிக்கையில் சிங்கள உத்தியோகஸ்தர்களுக்கு தமிழ்ப்பகுதிகளிலும், தமிழ் உத்தியோகஸ்தர்களுக்கு சிங்களப்பகுதிகளிலும், கடமையாற்ற மொழிப் பிரச்சினை தடையாக உள்ளது. எனவே ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தர் நாட்டின் சகல பாகங்களிலும் கடமையாற்ற மொழிப்பிரச்சினை தடையாக இருக்கக்கூடாதென்ற காரணத்தினாலேயே மேற்படி இம்மும்மொழித் திட்டத்தினை அமுல் செய்ய பொலிஸ் தலைமைப்பீடம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் நாட்டில் உல்லாசப் பயண துறை ஊக்குவிக்கப்பட்டுவருவதனால் பொலிசாருக்கு 4 மொழி அறிவும் அத்தியாவசியமானதெனக் குறிப்பிடப்பட்டது

**நாகம்ஸ்** [சுன்னாகம்]
தினசரி 4-45, 7-00 9-45
**PERCY**
வயது வந்தவர்களுக்கு மட்டும்

**வெஸ்லி**
காங்கேசன்துறை... 
Daily 4-45 & 7-00
சனி, ஞாயிறு 2-30
DIAMOND MERCENARIES

## கப்பல் சேவை ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை - இந்திய கப்பல் சேவை நேற்று முதல் மீண்டும் ஆரம்பமானது.

திங்கள், புதன், வெள்ளிக் கிழமைகளில் ராமேஸ்வரத்திலிருந்து புறப்பட்டுவரும் கப்பல் செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் காலை 9 மணிக்கு தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரம் புறப்படும். [இ]

கடைசி சில தினங்கள்
**வின்சர்** (யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 3 காட்சிகள்
10-30 2-00 6-00
**பைலட் பிரேம்நாத்**
(ஈஸ்ட்மன் கலர்)
மறு அறிவித்தல் வரை 9-30 மணிக் காட்சிகள் காண்பிக்கப்படமாட்டா

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - ஈ. வி. சரோஜா நடித்த
**கொடுத்து வைத்தவள்**
(புதிய பிரதி)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, & 9-45
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
**ஒளவையார்**

**விக்டோ** (யாழ். நகர்)
போன் 7698 தினசரி 4 காட்சிகள்
**கல்யாணபரிசு**
(புதிய பிரதி)

**REGAL** (Jaffna)
NOW SHOWING
Daily at 2-00 4-30, 7-00p m only
SIAN PHILIPS in
**MURPHY'S WAR**
(War Film)
மறு அறிவித்தல்வரை இரவு 9-30 மணிக் காட்சிகள் காண்பிக்கப்படமாட்டாது.
From 3-8-79
ROCCO AND HIS BROTHERS

**Sridhar - Jaffna**
Daily 5 Shows at: 10-30 a m, 1-30, 4-15, 7-00 & 9-45 p m.
**The Day of THE JACKAL** (Color)
SUPERB SUSPENSE THRILLER...
"ஜக்கோல்" கலர்

4th Majestyk Week! Daily 5 Shows
**SHANTHI** JAFFNA • Phone: 7642
10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 p m.
CHARLES BRONSON in
"Mr. MAJESTYK-" Adults Color
குறிப்பு:
இரவு 9-30 காட்சியும் இப்பொழுது நடைபெறுகிறது

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜமுனா - நாகையா நடித்த
**நிச்சய தாம்பூலம்**
(புதிய பிரதி)

**மனோகரா** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30, 9-45
பத்மினி-ராகினி-சுகுமார்
**சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்**
(பக்திப்படம்—ஈஸ்மன் கலர்)

# இன்றைய பலன்

ஆடி மாதம் 17-ம் திகதி
(வியாழக்கிழமை)
(2-8-1979)

**மேடம்:** தூரத்துப் பயணம் துயரத்தைத் தரலாம், வருமானத்தில் வீழ்ச்சி தென்படும், வைத்தியச் செலவுகளுக்கும் இடமுண்டு, இன்று சிறுவருத்தம் வரினும் பெருமுறையில் கவனிக்கவும்.

**இடபம்:** இதயம் இன்று இன்பத்தால் விம்மும், குடும்பத்தில் உறவுமுறைகள் மிகவும் அன்பு கொண்டதாக இருக்கும், புத்திரர்களாலும் மதிப்பு உயருவதற்கு இடமுண்டு, சுபகரமான தினம்.

**மிதுனம்:** எதிர்பாராத முன்னிலையிலிருந்து ஆபத்து உருவாகும், உன் வீட்டிலேயே சிறிய பூசல்கள் தோன்றக் கூடும், இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும், தெய்வ வழிபாடு விரும்பத்தக்கது.

**கடகம்:** தேனுன சம்பவங்கள் நடைபெறும், தேடியது கிடைக்கும், காதலர்கள் வாழ்க்கையில் திருப்பமான தினம், முதியோர்கள் வாழ்க்கையில் இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும்.

**சிங்கம்:** தொழில்மாற்றம் அல்லது இருப்பிடமாற்றத்துக்கு வழிகோலப்படலாம் இதன்மூலம் பதவியில் உயர்வும் கிடைக்கலாம், பேட்டி காண்பதற்கு ஏற்ற தினம்.

**கன்னி:** இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும், சாதனைகள் தாக்கும், கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள், பாலுணர்ச்சி மேலிடும்.

**துலாம்:** வாயுக்கோளாறு உடல்நலத்தைப் பாதிக்கலாம், உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும், தானிய நஷ்டத்துக்கு இடமுண்டு, வியாபாரிகள் புதிய முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**விருச்சிகம்:** அவசர புத்தியினால் விபரீதங்கள் விளையலாம், கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும், அடக்கமாக இருக்கவும்.

**தனுசு:** பிறருக்கு உதவுவதில் முன்னிற்பீர்கள், இதன் மூலம் பணம் செலவாகும், அரசியல்வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்டதினம்.

**மகரம்:** மனையில் பூசல்கள் தோன்றி மறையும், தனிமையை விரும்புவீர்கள், தொழில்புரியும் இடத்தில் கண்துடைப்புவேலை நடைபெறும், நண்பர்கள் சூழ்ச்சிவலை விரிப்பதற்கு முற்படுவார்கள்.

**கும்பம்:** வாகன சொந்தக்காரர்களுக்கு சிறப்பான தினம், ஆசிரியர்கள் வாழ்க்கையில் போற்றப்படுவார்கள், மாணவர்களாயின் கல்வித் துறையில் நல்ல முன்னேற்றம் உண்டு, பொதுத்துறைகளிலும் நாட்டம் பிறக்கும்.

**மீனம்:** செய்தொழிலால் சிறப்புண்டு, மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், இலக்குக்கு அதிர்ஷ்டலாபங்களும் கிடைக்கலாம், சுற்றுடலில் நல்ல திருப்பம் ஏற்படும், உற்சாகமான தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

**றியோ** போன்: 7607
(நாரந்தனை...)
தினசரி: 10-30, 4-45, 7-00,
**MARCOPOLO**
(Adventure)

## பரு. நகர அபிவிருத்தி நடவடிக்கை

[புலோலி]

பருத்தித்துறை நகர அபிவிருத்தியை துரிதமாக மேற்கொள்ளுவதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை நகர சபைத் தலைவர் திரு எம் வேலும்மயிலும் மேற்கொண்டு வருகின்றார்.

இதற்கு முன்னோடியாக வரி இறுப்பாளர்களின் குறைபாடுகளை அவர் நேரில் அறிந்து வருவதோடு அக்குறைபாடுகளை உடனுக்குடன் நிவர்த்திசெய்வதற்குரிய ஒழுங்குகளையும் மேற்கொண்டு வருகிறார். [க]

## சனசமூகநிலைய 10வது ஆண்டுவிழா

[கோப்பாய்]

கோப்பாய் வெல்லெருவைப் பிள்ளையார் சனசமூக நிலையத்தின் 10 வது ஆண்டு நிறைவுவிழா இம்மாதம் 4ம் 5ம் திகதிகளில் நடைபெறுகிறது.

நிலையத் தலைவர் திரு சி வெ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சனியன்று மாலை நிலைய முன்றலில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்.

2ம் நாள் நிகழ்ச்சியில் அறநெறிப்பாவலர் திரு கனகராசா கோப்பாய் பொலிஸ் அதிபர் திரு சந்திரகோனை, கிராமசபை ஆணையாளர் திரு ஜே எஸ் ஆனந்தம், உதவி அரசாங்க அதிபர் திரு கி அம்பலவாணர் ஆகியோர் உட்பட பலர் உரை நிகழ்த்துவர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். [இ]

## விஞ்ஞான...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவருகிறது சுமார் 90 ஆசிரியர்கள் இவ்விதமாக வெகு விரைவில் நியமிக்கப் படவுள்ளனர்

இலங்கைத் தொலைக் கல்வி நிறுவனம் எனும் அமைப்பு பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியிருந்தும் அனுமதி கிடையாத மாணவர்களின் உயர் கல்விக்கென கடந்த அரசாங்கத்தால் அமைக்கப்பட்டதாகும். [கி]

## ஒரு 'கோமாளி' ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய அச்சாணியை அசைத்து தனது சகாவைப் பிரதமராக்கிய இன்றைய "கிங்மேக்கர்" ராஜ்நாராயண்

"பத்திரிகைகள் தங்கள் பேச்சையும் செயல்களையும் நையாண்டி செய்கின்றனவே" என்றொரு நிருபர் கேட்ட போது—

"பெரிய தொழிலதிபர்களுக்கு எங்கள் திட்டம் இடைஞ்சலாக இருக்கின்றது பிரசார சாதனங்கள் அவர்கள் கையில் இருக்கின்றது வெளிப்படையாகப் பேசும் என்னை எப்படிப் பிடிக்கும்—? விரைவில் புரிந்து கொள்வார்கள்" என்று அமைச்சராக இருந்தபோது கூறினார் இன்றோ அவர்கள் திறமையை அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்

ராஜ்நாராயணை தென்னாட்டினர், ஹிந்திவெறியர் என்று வர்ணிப்பதுண்டு இந்தியைத் திணிப்பதில் முன்நிற்பவர் என்றும் கூறுகிறார்கள். அவருக்கு ஆங்கிலம் அவ்வளவாக பேசவராது எனவே இந்தியில்தான் அவர் பேசுகின்றார் எழுதுகின்றார் தான் இந்திவெறியன் என்பதையும் மறுத்துரைத்திருக்கின்றார்.

இன்று ராஜ்நாராயண் சௌத்திரி சரண்சிங்கின் செல்லப் பிள்ளை அந்தப் புகழ் பெற்ற சாணக்கியர் விரும்பியிருந்தால் துணைப் பிரதமராகியிருக்கலாம் ஆனால் அவர் வெளியிலிருந்து கட்சியை வளர்க்கப் போவதாகச் சொல்லுகின்றார் இந்திய 'அரசியல் நாடகத்'தின் அடுத்த கட்டம் என்ன?

## யூனியன் கல்லூரி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். பாடசாலைகள் ஹொக்கி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் யாழ். பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவரும் 19 வயதுக்குட் பட்டோருக்கான ஹொக்கிப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி யாழ் மத்திய கல்லூரியை 5—0 கோல்களால் வெற்றிபெற்றது.

ஜே பி நிரஞ்சன், பி. சுலாமோகன், கே. கோபாலபிள்ளை, எஸ் மகேந்திரன், ஆர் சகாதேவன் ஆகியோர் தலா ஒரு கோலை அடித்தனர்.

திரு. இராஜானந்தன், திரு பாலேந்திரா ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

### வெற்றி - தோல்வி இல்லை

மேற்படி விளையாட்டுச் சங்கத்தால் நடாத்தப்பட்ட 17 வயதுக்குட்பட்டோரின் போட்டியில் யூனியன் கல்லூரி மகாஜனக் கல்லூரியுடன் மகாஜன மைதானத்தில் மோதியது இரு கோஷ்டிகளும் தலா ஒவ்வொரு கோலைப் போட்டதால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது. [இ]

## பரு. தொகுதியில் 20 வீடுகள் திட்டம்

[புலோலி]

பருத்தித்துறைத் தொகுதியில் மேலும் இருபது வீடுகளைக் கொண்ட வீடமைப்புத் திட்டமொன்று தும்பளையிலும் மாயக்கையிலும் அமைக்கப் படவுள்ளது

அரசாங்கத்தின் தேர்தல் தொகுதிக்கு தோறும் வீடுகள் அமைத்து வீடற்ற ஏழைக் குடும்பங்களுக்கு வழங்கும் திட்டத்திற்கமைய பருத்தித்துறை தொகுதியில் சுப்பிரவளத்தில் 5 வீடுகளும், குடத்தனை கரையூரில் பத்துவீடுகளும் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டன. அடுத்தபடியாக மேலும் 20 வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த இருபது வீடுகளில் பத்து தும்பளையிலும் பத்து மாயக்கையிலும் அமைக்கப்பட இருப்பதாக வடமராட்சி வடக்கு கிழக்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு வை. வேலும்மயிலும் தெரிவித்தார் இவ்வீடுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை யாழ் தேசிய வீடமைப்புத் திணைக்களம் மிக விரைவில் ஆரம்பிக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (அ)

## ஜி. சி. ஈ. பரீட்சை

## இராணுவம் - பொலிஸ் கூட்டுப் பாதுகாப்பு

[கொழும்பு]

ஆகஸ்ட் மாதம் பத்தாம் திகதி ஆரம்பமாகவிருக்கும் க. பொ. த. உயர்தரம் சாதாரண பரீட்சைகளின் போது பொலிஸ், இராணுவப் பகுதியினர் கூட்டாகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்

பரீட்சை நிலையங்களுக்கு வினாத்தாள்களைக் கொண்டு செல்லும் விசேட பஸ் வண்டிகளில் ஆயுதந் தரித்த பொலிஸாரும், இராணுவத்தினரும் கடமையாற்றுவர். இப் பஸ் வண்டிகள் செல்லும் பாதைகள் பலத்த பொலிஸ் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்கும்

மேலும் பரீட்சை நிலையங்கள் முழுநேரக் கண்காணிப்பிலும், சில முக்கிய பகுதிகள் பாதுகாப்பு காரணங்களையிட்டு பொலிஸாரின் விசேட கண்காணிப்புக்கும் உட்பட்டிருக்கும்,

மேலும் பொலிஸார் வினாத்தாள்கள், விடைத்தாள்கள் செல்லும் தபால் அலுவலகப் பகுதிகளிலும் தமது கண்காணிப்பினை மேற்கொள்ளுவார்கள். [இ]

### இலங்கை வர்த்தக ஊழியர்

# சங்கத்தில் எள்ளளவேனும் வகுப்புவாதம் கிடையாது"

## யாழ்.நகரில் பாலாதம்பு

(யாழ்ப்பாணம்)
இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தில் எள்ளளவேனும் வகுப்புவாதம் கிடையாது. சங்கத்தின் பொதுச்சபை வடக்கு கிழக்கில் வாழும், தமிழ்பேசும் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டென்பதை அங்கீகரித்துள்ளது.

யாழ் பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் நடந்த கலந்துரையாடலில் இலங்கை வர்த்தக ஊழியர் சங்க செயலாளர் திரு. பாலாதம்பு கூறினார்.

தெற்கிலிருந்து வந்த நல்லெண்ண தூதக்குழுவினர் நடத்திய இக்கலந்துரையாடலில் திரு. பாலாதம்பு மேலும் கூறியதாவது: எங்கள் சங்கத்தில் 30,000 உறுப்பினர்கள் இருக்கின்றனர். நாட்டின் சகல பகுதியிலிருந்தும் உறுப்பினர் இருக்கின்றனர். 90 வீத உறுப்பினர் சிங்களவர்களே.

250பேர் கொண்ட பொதுச்சபை கூட்டத்தில், தமிழரின் சுயநிர்ணய உரிமைபற்றிய தீர்மானம் வந்தது இத்தீர்மானத்தை ஒருவர்மட்டும் எதிர்த்தார் மற்றஎல்லாரும் ஆதரித்து வாக்களித்தனர்.

வடக்கு கிழக்கிலுள்ள தமிழ்பேசும் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையுண்டென்றும், அதனை பாவிக்க உரிமையுண்டென்றும் பிரிவினைக்காக அதனை பாவிக்காமல், ஐக்கியத்துடனும், ஒற்றுமையுடனும், வாழவேண்டும் என்று அத்தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது எங்கள் சங்கத்தில் எள்ளளவேனும் வகுப்புவாதம் கிடையாது என்றும் திரு பாலாதம்பு கூறினார்.

நான் அரசியல்வாதியல்ல, ஆனால் அரசியல் நடவடிக்கையில் ஈடுபாடுடையவன்.

ஒவ்வொரு தனிப்பட்ட மனிதர்களும் தங்களுக்கு தெரிந்த தகவல்களை இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்திற்கு அல்லது இந்த கமிட்டிக்கு சமர்ப்பித்தால், அத்தகவல்களை பயன்படுத்தி மக்களின் கஷ்டங்களை நீக்க முயற்சிசெய்வோம்.

இங்கு தமிழ்பேசும் மக்கள் படும் கஷ்டங்களை தென்னிலங்கையில் வாழும் சிங்கள மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களின் ஆதரவை பெறுவோம்.

அரசியல்வாதிகள் வாக்கு வேட்டை ஆடுவதில்தான் கண்ணுயிருப்பார்கள். ஆனால் நான் அரசியல்வாதியல்ல. அரசியல் நடவடிக்கையில் ஈடுபாடுடையவன்.

அரசியல் விஷயங்களில், சாதாரண மக்களின் கருத்து இந்த பெறப்படுவதில்லை, அரசியல் தொடர்பான அவசரகாலநிலை ஜனநாயக உரிமைகள் பற்றி அரசியல் மட்டத்தில்தான் முடிவு எடுக்கப்படுகிறது. இவையெல்லாம் மக்களுக்குரிய கேள்விகளேயன்றி அரசியல்வாதிகளுக்குரியதல்ல.

அரசியல் விஷயங்கள், தொழிற்சங்க வாதிகளுக்கு, தொழிற்சங்க உறுப்பினர்களுக்கு உரியதல்லவென்கிறார்கள் இவையெல்லாம் கவிகளாக உள்ளவர்களுக்கு அப்பாற்பட்டதென்கிறார்கள். தொழிலாளர்கள் வேதன சம்பள உயர்வுபற்றித்தான் அக்கறையுள்ளவர்களாக இருக்கவேண்டுமாம். தேசிய பிரச்னைகளில் கருத்துக்கொள்வதற்கு அவர்களுக்கும் உரிமையுண்டு.

இப்பகுதியில் வாழும் மக்கள் தங்களுக்கு கிடைத்த தகவல்களை உடனடியாக இக்கமிட்டிக்கு தெரிவிக்கவேண்டும். அத்தகவல்களை தென்னிலங்கை மக்களுக்கு பரப்புவோம். அதன்மூலம் ஒருஐக்கியத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவோம். (ச)

# கொடுமை தாங்காமல் நஞ்சு குடித்தாராம்

## வேலைக்காரச் சிறுவன் வாக்குமூலம்

[யாழ்ப்பாணம்]
வேலைக்கமர்த்தியிருந்தவர்களின் துன்புறுத்தலைத் தாங்க முடியாமல் நச்சுத்திராவகம் அருந்தியதாகக் கூறும் வேலைக்காரச்சிறுவன் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தான் தலவாக்கலையைச் சேர்ந்தவரென்றும் பண்ணையில் உள்ள ஒரு வீட்டில் வேலை செய்து வந்ததாகவும், தினமும் வீட்டிலுள்ளவரும் மனைவியும் தன்னை அடித்துத் துன்புறுத்தி வந்ததாகவும் சம்பவதினமும் தன்னை அடித்துத் துன்புறுத்தியதால் தாங்க முடியாத வேதனையால் நச்சுத்திரவகத்தை குடித்து உயிரைப் போக்க விரும்பி அதனை அருந்தியதாகவும் தெரிவித்தார். தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் இச்சிறுவன் சிகிச்சை பெற்று வருகிறார்.

பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர், [கொ]

### எம்.ஜி.ஆர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
மூராய்ச்சிக் கழகமே முன்னின்று நடத்தியது குறிப்பிடத்தக்கது.

மகாநாடு நடைபெறவிருக்கும் மதுரைநகரம் சிரணமக்கப்பட்டுவருகின்றது.

### ஏர் பூட்டு விழா

(கொழும்பு)
இவ்வாண்டு ஏர்பூட்டு விழா அக்டோபர் மாதம் 14ம் திகதி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த திஸ்ஸமகராம வயலில் நடைபெறும்

60 ஏக்கர் நிலத்தில் நடைபெறும் இவ்விழாவில் ஜனாதிபதி, அமைச்சர்கள், எம். பிக்களுடன் உலக வங்கி உபதலைவரும் கலந்துகொள்வார்.

[இ]



புங்குடுதீவு கிழக்கு அருள்மிகு கண்ணகை அம்பாள் என அழைக்கப்படும் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட வைபவத்திற்கு வருகைதந்திருந்த வடபகுதிப் பாதுகாப்பு அதிகாரி பிரிகேடியர் வீரதுங்காவையும், யாழ்ப்பாணம் பொலிஸ் அதிபர் திரு. விபோ பெரேராவையும் ஆலய பஞ்சாய சபையினரும், தேர்த்திருப்பணிச் சபையினரும் மாலையிட்டு வரவேற்கப்படுவதை முதலாவது படத்திலும், பக்தர்கள் புடைசூழ புதிய சித்திரத்தேர் வீதியுலா வருவதை இரண்டாவது படத்திலும், தேரை அமைத்துக்கொடுத்த ஸ்தபதி ஆர். ஜீவரத்தினம் ஆச்சாரிக்குத் தேர்த்திருப்பணிச்சபை அமைப்பாளர் திரு சி. முத்துக்குமாருக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதை மூன்றாவது படத்திலும் காண்க. படப்பிடிப்பு: ஏ வி. எம்:

### ஐயக்கோன் கொலைமுயற்சி வழக்கு:

# "எதிரிகளுக்கும் எனக்கும் கோபதாபம் எதுவுமில்லை"

## குறுக்குவிசாரணையில் ஐயக்கோன்

(யாழ்ப்பாணம்)
"எனது மகன் சந்திரகுமார், பிரேம்குமாரின் சகோதரியை திருமணம் செய்தார். பிரேம்குமார் எதிரிகளின் இனத்தைச் சேர்ந்தவர் இவர்களுக்கு நான் பெரும் உதவி செய்திருக்கிறேன்.

உடுவில் 'ஐயக்கோன்' கொலை முயற்சி வழக்கில் குறுக்கு விசாரணையின்போது, காயமடைந்த எம் செல்லத்துரை (ஐயக்கோன்) மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ் மேல்நீதி மன்றத்தில் நீதிபதி ஜனாப் எம் ஜாமில் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

சட்டத்தரணி பாலாதம்பு சாட்சியமளித்த செல்லத்துரையை (ஐயக்கோன்) குறுக்குவிசாரணை செய்தார்.

சட்: உமக்கும் பிரேம்குமாருக்கும் என்ன தொடர்பு!- பிரேம்குமார் எதிரிகளின் இனத்தைச் சேர்ந்தவர்.

சட்! எந்த இனம் தமிழினமா?- உங்களுக்கு சாதிப்பிரிவுப்படி. நான் அவர்கள் சமூகத்தைச் சேர்ந்தவனல்ல.

சட்! எதிரிகளுக்கும் உமது பிள்ளைகளுக்குமிடையில் கோபதாபமுண்டென்றீர்?-ஆம்.

சட்! உமக்கும் எதிரிகளுக்குமிடையில் கோபம் எதுவும் இல்லை?-இல்லை.

சட்! குற்றவியல் வழக்கு காரணத்தை நன்கு அறிவீர்கள்?-ஆம்.

சட்! இவர்களுக்கு வழக்கு இருந்ததா?- இருபகுதியினருக்கும் சரிசமனாக வழக்குகள் இருந்தன.

சட்! என்ன வழக்கு?- என் மகன் சந்திரகுமார்மீது 1ம் எதிரியின் தப்பனை வெட்டியதாக மேல்நீதிமன்றத்தில் வழக்கு இருந்தது. விசாரணை நடந்தது.

சட்! குறைந்த குற்றத்தை ஏற்றுக்கொண்டாரா?- ஆம். வழக்கை சுமமாக முடிக்கலாம் என்று அப்புக்காத்துமார் செய்த வழி இது.

சட்! வடபகுதியில் அப்படியும் சட்டத்தரணிகள் இருக்கிறார்கள்?- அப்படியும் நடக்கிறது.

சட்! வழக்குவேண்டுமென போடப்பட்டதா?-தெரியாது.

சட்! பிரேம்குமார் இப்ப எங்கே?-என்னைப் பொறுத்தளவில் கடந்த ஒன்றரை வருடமாக அவர் இங்கில்லை அவர்கள் அயலவர்.

சட்! மகனுக்கு எதிராக வழக்கு இருப்பது தெரியும்?- ஆம்.

சட்! எதிரிகளாகவும் இருக்கின்றனர்?-ஆம்.

சட்! பொலிஸாருக்கும் உமக்குமிடையில் உறவு எப்படி? சாதாரணமான உறவு

சட்! இந்த சாட்சியமளிக்காமல் பிரேம்குமார் வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டார்?- குதிரைக்கு முன்னால் வண்டிலைப்பூட்டுகிறீர்கள்

சட்! உமது மகன் பிரேம்குமார் ஆஸ்பத்திரியில் அனுமதித்தது தெரியுமா?- பிரேம்குமார் என் மகனல்ல.

சட்! பிரேம்குமார் எப்பவரை ஆஸ்பத்திரிக்கு அனுமதித்தது தெரியுமா?- மறுநாள் தெரியும்.

சட்! பிரேம்குமாரை ஆஸ்பத்திரி வார்ட்டில் கண்டிருப்பீர்?-இல்லை.

சட்! பிரேம்குமாருடன் வார்ட்டில் கதைத்தீரா?-ஞாபகமில்லை.

சட்! சுடுபட்டபின் எப்போ மகனை கண்டீர்?- என்னை காரில் ஏற்றும்போது,

சட்! ஏதாவது மகனிடம் கூறினீரா?-ஞாபகமில்லை.

சட்! அவர் ஏதாவது கேட்டாரா?- ஞாபகமில்லை.

சட்! நாகலிங்கம் யார்?- அவர் ஒருவிவசாயி காசு கொடுக்கல் வாங்கல் செய்வதுண்டு.

சட்! மல்லாகம் கோர்ட்டில் நாகலிங்கத்தை காண்பதுண்டா?- தற்போதைய வழக்குகளில் வந்திருக்கிறார்.

சட்! இந்த வழக்குகள் சம்பந்தமாக நீர் ஆலோசனை வழங்கியிருக்கிறீர்?- அவருக்கு சில பிரபல சட்டத்தரணிகள் உண்டு.

சட்! நீங்களும் மல்லாகத்தில் பிரபல சட்டத்தரணி தானே?- நான் சாதாரண சட்டத்தரணி

சட்! உமது பிள்ளைகளின் வழக்குகளுக்கு ஆலோசனை வழங்க வில்லையா?- அவர்களுக்கு நல்ல அப்புக்காத்துமார் இருக்கின்றார்கள்.

சட்! உமக்கு எத்தனை பிள்ளைகள்? 8 பிள்ளைகள்

சட்! என்ன உத்தியோகம் பார்க்கிறார்கள்?-இருவர் ஜேர்மனியில், ஒருவர் பிரான்சில், ஒருவர் வங்கியில், மற்றொருவர் இபோ சவில் வேலைபார்க்கிறார்,

சட்! சிவகுமார்?- அவர் பொறியியல் மாணவனாக லண்டனில் படிக்கிறார்,

சட்! நந்தகுமார்?- அவர் வேலை செய்யவில்லை,

சட்! சம்பவத்தின் போது சிவகுமார் என்ன செய்தார்? -'அட்வான்ஸ் லெவல்' சித்தியடைந்து, லண்டன் போக ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்,

சட்! எதிரிகள் மூவரும் கூட்டணியாக ஒன்று சேர்ந்தார்கள்?-சம்பவத்தின் பின்கூட்டணியாக இருந்தார்கள்,

சட்! கூட்டணி அமைந்தது விடுதலை பெறுவதற்கல்ல, உமது பிள்ளைகளின் சுதந்திரத்தை பறிப்பதற்கா?-கூட்டணி அமைந்ததன்விளைவுஇது

சட்! கட்ட இடத்தில் உமது ஆசைநாயகி வந்தாரா? அவரின் மகன் மகள் வந்து காரில் ஏற்றினர்,

சட்! ஆசைநாயகி வரவில்லை?-காரில் போய் விட்டோம்

சட்! நீர் 48 மணித்தியாலத்தின் பின் வாக்கு மூலம் கொடுத்ததற்கு காரணம் கூறமுடியுமா? -11-ம் திகதி நான் கண்திறந்தேன், வாக்குமூலம் எடுக்கவில்லை 8-ம் முறை எப்ப வந்தார்கள் என்று தெரியாது,

சட்! மயக்கமடைந்த பின் எழுந்திருந்தீரா?- எழும்பியிருக்காவிட்டால் இங்கு வந்திருக்க முடியாது [சிரிப்பு]

சட்! சட்டத்தரணி சி மோதிலால் நேரு குறுக்கு விசாரணை செய்தார்,

### செல்வா அறங்காவல் குழுக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]
செல்வா அறங்காவல் குழுக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை மாலை கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையின் இல்லத்தில் நடைபெறுகிறது [கெ-இ]

### சேதுராமன் வரவில்லை

உடுப்பிட்டி வடக்கு நெற்கொழு வைரவர் கோவிலில் இன்று நடைபெறவிருந்த மதுரை சேதுராமன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி தவிர்க்க முடியாத காரணங்களால் நடைபெறமாட்டாது. என் கே பத்மநாதன், அம்பல இராமச்சந்திரன் ஆகியோரின் நாதஸ்வரக் கச்சேரி நடைபெறும். —5ம் திருவிழா உபயகாரர்கள்.
3213

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் கம்பனியாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி [illegible] அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB 8946 78 The Eelanadu P B No: 49, [illegible] [illegible]; 489.